(7 pages) **Reg. No. :** ....................................

**Code No. : 22164** **Sub. Code : JSTA 3 B**

B.A. (CBCS) DEGREE EXAMINATION,
NOVEMBER 2017.

Third Semester

Tamil — Main

Skill Based Subject — பேச்சுக்கலை

(For those who joined in July 2016 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இன்றைய உலகம் எதன் அடிப்படையில் இயங்குவதாக பேச்சுக் கலையில் திருமலை குறிப்பிடுகிறார்?

 (அ) பேச்சு (ஆ) சுதந்திரம்

 (இ) செல்வாக்கு (ஈ) பணம்

2. புரட்சிக்கவி என்று அழைக்கப்படுபவர் யார்?

 (அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன்

 (இ) வாணிதாசன் (ஈ) கண்ணதாசன்

3. இந்தியப் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் மேன்மைகளை சிகாகோவில் நிறுவும் அளவிற்கு வளர்ந்த பேச்சாளர்

 (அ) சுவாமி விவேகானந்தர்

 (ஆ) எமர்சன்

 (இ) தாகூர்

 (ஈ) அறிஞர் அண்ணா

4. மகாபாரதக் கதையை குரல் ஏற்ற இறக்கங்களால் சொல்லி, கேட்பவர்களை கண்ணீர் சிந்தி இரசிக்க வைத்தவர்

 (அ) கிருபானந்த வாரியார்

 (ஆ) தெ.பொ.மீ.

 (இ) டி.ஆர். மகாலிங்கம்

 (ஈ) புலவர் கீரன்

5. குமரி அனந்தன், தட்டுத் தடங்கல் இல்லாமல் தொடர்ந்து பேசுவதற்கு அடித்தளமாக அமைவது எது எனக் குறிப்பிடுகிறார்?

 (அ) அச்சமின்மை (ஆ) குரல்வளம்

 (இ) தொடக்கம் (ஈ) உண்மைத் தன்மை



Nesamony Memorial Christian College, Marthandam

6. "உன்னில் உள்ள சிறந்ததை வெளிக் கொணர்வதே கல்வியின் தலையாய பணியாகும்" என்று கூறியவர் யார்?

(அ) அறிஞர் அண்ணா

(ஆ) காந்தியடிகள்

(இ) பெர்னாட் ஷா

(ஈ) சர்ச்சில்

7. மேடைப் பேச்சு நாட்டை வளப்படுத்தும், வாக்காளரைப் பண்படுத்தும், சட்டசபையைச் சீர் செய்யும் என்றவர்

(அ) திரு.வி.க. (ஆ) ஈ.வெ.ரா. பெரியார்

(இ) விவேகானந்தர் (ஈ) ரா.பி. சேதுப்பிள்ளை

8. பெரும்பாலான பேச்சாளர்கள் பின்பற்றுவது எவ்வகை நடை?

(அ) வட்டார நடை

(ஆ) ஆற்றொழுக்கு நடை

(இ) பொதுத் தமிழ் நடை

(ஈ) பூங்காற்றுப் போன்ற இனிய நடை

9. எந்த நாட்டு மக்களிடம் புத்தம் புதிய உணர்ச்சியும் வேகமும் பொருளை உற்பத்தி செய்யும் சக்தியில் வளர்ந்திருந்தன?

(அ) ஆசியா (ஆ) ஐரோப்பா

(இ) அமெரிக்கா (ஈ) ஜெர்மனி



10. பேசுவதற்கு எவ்வகையான நூல்களைப் படித்த தரவுகள் சேகரிக்க வேண்டும்?

(அ) கவிதை நூல்

(ஆ) கட்டுரை நூல்

(இ) மையப்பொருள் தொடர்பான நூல்

(ஈ) கதை நூல்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கு 250 சொற்களில் விடை தருக.

(அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

11. (அ) வெற்றிக் கனியைப் பேச்சினால் பறிக்கலாம் என்ற திருமலை கூற்றை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மாணவர்களின் மனநிலை அறிந்து பேசுதல் பற்றிக் கூறுக.

12. (அ) மேடைப் பேச்சில் அச்சமின்மை பற்றிக் கூறு.

(அல்லது)

(ஆ) பேச்சாளருக்கு நினைவாற்றல் தேவை என்பதை எடுத்துரைக்க.



Nesamony Memorial Christian College, Marthandam

13. (அ) சுவையான நிலைகளில் பேச்சை தொடங்குதல் பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) பேச்சாளர் நாளின் சிறப்பினைக் கூறி பேச்சைத் தொடங்கும் முறையைக் கூறுக.

14. (அ) தெளிவாகப் பேசுவதில் திறமையானவர் அறிஞர் அண்ணா என்பதை அவரது பேச்சாற்றல் மூலம் எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கூர்ந்த மதிநுட்பம் ஒருவரது பேச்சினை வெற்றியடையச் செய்யும் என்பதை கவிஞர் வைரமுத்து பேச்சாற்றலின் மூலம் விளக்குக.

15. (அ) நேருவின் பேச்சு தொலைநோக்குப் பார்வையையும், வாழ்க்கை பற்றிய நம்பிக்கை உணர்ச்சியையும் காட்டுகிறது என்பதை விளக்குக.

(அல்லது)

(ஆ) தொகுப்புரை கூறி பேச்சினை முடித்தல் பற்றி விளக்குக.



பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கு 600 சொற்களில் விடை தருக.

(அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

16. (அ) பேச்சினால் உலகம் எவ்வாறு இயங்குகிறது என்பது பற்றி விரிவான கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) கல்லூரி மாணவர்களுக்கான பேச்சு பற்றி ம. திருமலை குறிப்பிடும் செய்தியினை கட்டுரை வடிவில் தருக.

17. (அ) பேச்சுக்குரிய இன்றியமையாத தகுதிகள் எவையெல்லாம் என்பது பற்றி விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) மேடைப் பேச்சாளர் தனித்தன்மையுடன் திகழ்வதற்குரிய விதிமுறைகளைக் கூறுக.

18. (அ) பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைய வேண்டுமென நூலாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்?

(அல்லது)

(ஆ) பேச்சாளர் முன்னுரையுடன் தொடங்குவதையும் அதன் தன்மைகளையும் விவரி.



Nesamony Memorial Christian College, Marthandam

19\. (அ) சிறந்த பேச்சுக் கூறுகள் எவ்வாறிருக்க வேண்டும் என்பதை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) மேடைப் பேச்சுக்களில் நகைச்சுவை தோற்றுவித்தல் பற்றியும் பார்வையாளர்களின் எதிர்பார்ப்பு பற்றியும் விவரித்து எழுதுக.

20\. (அ) பேச்சை முடித்தலில் உள்ள பல வகைகளைக் கூறி விளக்குக.

(அல்லது)

(ஆ) பேச்சாளர் உடனடியாக பேச்சை முடித்தலையும், சூளுரை செய்து முடித்தலையும் கூறுக.



Nesamony Memorial Christian College, Marthandam